234

சிறிய புஷ்பத்தின்

OFFICE OF THE REGISTRAR
11 APR 1940
MADRAS

234



2386

சிறிய அம்மானை

✠

சே. ம. ஞ.

எனது

குருப்பட்டம்,

முதல் பூசையின்

ஞாபகம்

(9, 10 மார்ச்–1940)

"என் ஆண்டவரே! உமது இரக்கப் பெருக்கை
நான் இன்னிசை பாடுவேன். ஏனெனில்
நான் எதிர்பார்த்ததைவிட அதிகம்
நீர் அருளினீர்."—(சிறிய புஷ்பம்)

வி. மி. அலோய்சியுஸ் மரியநவமணி,
அர்ச். சின்னப்பர் குருமடம்,
திருச்சிராப்பள்ளி.

Imprimatur :

✠ FRANCIS TIBURTIUS ROCHE, S.J.
Ep. Tuticorin.
11 Feb. 1940.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 APR 1940
MADRAS

✠

சே. ம. சூ.

உங்களது ஜெபம்,

சுபசெய்தி,

வெகுமதிக்காக

மிகவும்

நன்றியறிந்திருக்கிறேன்.

வி. மி. அலோய்சியுஸ் மரியநவமணி.

முகவுரை

"ஒரு தடவை பாடுவது இரு தடவை ஜெபிப்பதற்குச் சரி" என்று அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த வேதசாஸ்திரி இப்படி சொல்லியது, நன்னடத்தைக்கும், வேதத்துக்கும் விரோதமான கெட்ட பாடல்களைப்பற்றியல்லவென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இதுநிற்க, சங்கீத ஞானம், தற்கால நாகரீகத்தின் முக்கியமானதோர் அம்சமானபடியால், பெரியோரும் சிறியோரும், ஆண்களும் பெண்களும், படித்தவரும் படியாதவரும், ஒரே வார்த்தையில் சகலருமே, தாங்களே பாடியோ, அல்லது மற்றவர்கள் பாடக் கேட்டோ மகிழ்வது நாமெல்லோரும் அறிந்த விஷயம். ஆகவே சகலருக்கும், சங்கீதத்தில் பாண்டித்தியம் பெற்றவர்கட்கும், மற்றவர்கட்கும் பிரயோஜனமாயிருக்கும்படி, தற்போது பலராலும் எங்கும் வெகுவாய் புகழ்ந்து கொண்டாடப்படுபவளும், மிஷன் நாடுகளுக்கும், மிஷனெரிகளுக்கும் விசேஷ பாதுகாவலுமான, அர்ச். குழந்தை சேசு தெரேசம்மாளின் இனிய சரிதையை சிறிய அம்மானையாய் எழுத முன்வந்தேன்.

இறுதியாக, என் குரு பட்டாபிஷேகத்தையும், முதல் திவ்ய பூசையையும், விண்ணில் நின்று கண்டு களிக்க, சுமார் 3 மாதங்களுக்குமுன் (2–12–1939 சனிக்கிழமை இரவு 10-40 மணிக்கு) மண்ணைவிட்டேகிய என் அருமை தந்தை மகா-ா-ா-ஸ்ரீ வியாகு **மிக்கேல் நாடாரவர்களின்** அன்பின் ஞாபகார்த்தமாக இச்சிறிய நூலை அர்ப்பணஞ்செய்கிறேன். அவர்களுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக, வாசகரே, நேசர்களே, பரமனை மன்றாடுங்கள்.

ஆக்கியோன்.

சிறிய புஷ்பத்தின் சிறிய அம்மானை

OFFICE OF THE REGISTRAR
11 APR 1940
MADRAS

கடவுள் வாழ்த்து

திரியேக கடவுள் துதி

சிறியநற்புஷ்பமென்னும் சிறுராணிநாமம்பூண்டு
சிறியதோர்வழிகையாடிச் சீரிடம்வானிற்கொண்ட
சிறியஉம்பத்தினியாம் தெரேசம்மாள்சரிதைபாட
சிறியனுக்கருள்புரிவாய் திரியேகதேவதேவே.

இஸ்பிரீத்துசாந்து துதி

பாவிகள்தமக்கு நல்ல பாதையாய்நின்றராணி
சீவியசரிதைதன்னைச் செந்தமிழதனாற்பாட
காவியநூலோர்சொல்லிற் கருத்ததிலேற்றுக்கொள்ள
ஆவியாம்தேவாவுந்தன் அடியிணையிறைஞ்சினேனே.

அம்மானை

பிறப்பு வளர்ப்பு

சீர்நிறையுந்தேவசுதன் திருவருள்மிகப்பெற்று
கார்படைத்தசெல்வமெலாங் கனிவாய்நிலைத்துவரும்
பேர்படைத்ததேசமது பிரான்சென்னும்தேசமதாம்
நேர்மைநிறைபுண்ணியர்கள் நிறைந்துள்ளதேசமதாம்

கத்தோலிக்குவேதமது கதித்துவளருதங்கே
சித்திதரும்வேதமது செழித்தோங்கிவாழுதங்கே
பரலோகவாசிகளில் பலபேர்பிரான்சிலுள்ளோர்
பரன்பாதங்கண்டோரில் பலரேபிரான்சிலுள்ளோர்
கத்தோலிக்ககைங்கரியம் கருத்துடன்கற்றிடுவோம்
உத்தமப்பிரான்சதனை உறுத்தாய்ப்பின்பற்றிடுவோம்
மிஷனுட்டிலேயுள்ளோர் மிகுபெருமங்நாட்டோர்
மிஷனுட்டினுக்குதவி மீசுரமாய்ச்செய்வதங்கே
அத்தகையநன்னுட்டில் அத்தன்திருவருளால்
சத்தியவேதமது தழைத்தோங்கிவாழ்வுபெற
ஆயிரத்தெண்ணூற்று எழுபத்துமூன்றண்டுதனில்
மேயஜனவரியில் மிக்கிலங்குதேதிரெண்டில்
சேலிகேரின்லூயிமாட்டின் செல்வரிருவரிடம்
சீலிதெரேசம்மாள் செம்மையுறத்தோன்றினளே
பிரான்ஸ்வாஸ்தெரேஸ்பிறந்தாள் பேர்சேசுபேர்தினத்தில்
பிரான்சேனும்தேசமதில் **அலான்ஸேனும்**பட்டணத்தில்
சேயருக்குப்பெற்றோர்கள் செல்வப்பேர்வைப்பதுபோல்
சேயவட்குவைத்தார்கள் **சின்னராணி**யென்னும்பேர்
உத்தமகுடும்பத்திற்கு உலகத்தின்செல்வமுடன்
புத்திரசந்தானப் புகழ்தந்தாரெம்பரமன்
நவமணிதெரேசாளும் நாள்ஒருமேனியுமாய்
புவியினிலேவளர்ந்தாள் பொழுதொருவண்ணமுமாய்
ராணிதெரேசழகை நாணியியம்பிடவே
மேனியோதங்கமதால் மேல்பூச்சுக்கொண்டதுவே
திலகம்போலேயிருந்தாள் திங்கள்நேர்சின்னராணி
அழகேஉருவெடுத்த அமலியாங்கன்னிமேனி

அகத்தின்பரிசுத்தம் அழகாய்த்துலங்குவதே
முகமெனநின்றும்மதி முழுதாயிலங்குவதே
மலர்ந்தபூவென்றெண்ணி வண்டினங்கள்வந்தனவே
அலர்ந்தமுகங்கண்டு அண்டிப்பின்சென்றனவே
சுந்தரியைக்கண்டதுவும் தாமரைசோம்பினவே.
விந்தையாய்ப்பூத்திருந்த ரோஜாவதங்கியதே
குழந்தையின்சொற்கேட்டுக் குயிலினம்வெட்கியவே
வழங்குமயிலினங்கள் வாடிப்பின்சென்றனவே
தங்கநிறங்கண்டு தயங்காமகிழ்கூர்வார்
நங்கைகுரல்கேட்டு நன்குய்மகிழ்ந்திடுவார்
புன்முறுவல்கொண்டமுகம் புவியில்விளங்கியதே
நன்மைநிறைசந்தோஷம் நாடிநிரம்பியதே
பெற்றோரும்பாலகரும் பிரானைமறந்தாரில்லை
மற்றவர்க்குமாதிரியாய் மகிழுறப்பொய்யில்லை
பெற்றோருரைத்தமொழி பின்னமிலாதேநடக்கும்
மற்றுங்குறையில்லை மகிழ்தரும்பாலரிடம்.
தங்கையருள்ளமதில் தங்கியதுநேசமதே
நங்கையர்மத்திதனில் நலமானநேசமதே
அமர்ந்ததுசந்தோஷ அமைதிபிவரிடையே
சமத்துவமற்றொன்று தரணியிலிதற்கில்லை
அந்தியுஞ்சந்தியுமே அழகாய்ச்செபஞ்செய்வார்
பந்தமுறவேதமொழி பாலோடருந்திடுவார்
சிறியபுஷ்பம்செபமே சிலைபோலசைவின்றி
மறுவறவேசெய்ய மாசில்முகம்விளங்கும்
நோக்கியெழும்தேவனையே நுண்ணிடையாள்கண்களுமே
கூப்பியகைதாமரையின் கொழுமுகையெனத்தோன்றும்

தாயைப்பிரிந்திடவே தாரணியில்நேர்ந்ததுவே
ஆயையிழந்தவன் ஆணையென்றேயிருந்தாள்
தாய்சேர்ந்தாள்மோக்ஷமென்று தாரகைதேர்ந்தாளே
தாய்மரிஊழியமே தாயகமாய்நேர்ந்தாளே.
சொப்பனம்போல்தோன்றிமறை சொற்பவாழ்வைநம்பல்
தப்பெனக்கண்டுகொண்டாள் தர்மகுணராணியவள்
பாவம்நிறையுலகில் பாழாகாதொன்றுமில்லை
சாவதேயுண்மையெனச் சாதுமறந்தாளில்லை
என்னதான்பார்த்தாலும் எங்குதான்சென்றாலும்
மன்னனைபொய்யில்லை மறக்கலையென்றாலும்
சந்திரசூரியனைக் கண்டுநினைந்திடுவாள்
சுந்தரிதேவனது மாக்ஷிதுதித்திடுவாள்
நட்சத்திரங்கண்டால் நாடுமர்ச்சிஷ்டவரை
பட்சம்நிறைபுஷ்பம் பாடிடுவாள்மேலோரை
புஷ்பங்களால்தேவன் மகிமைப்ரதாபமுமே
புஷ்பந்தான்கண்டாளே புகழ்மிகுசோபனமே
இடியுடன்மின்னலினால் இறைவனை அஞ்சிடுவாள்
நொடியில்சகலத்தையும் நோக்காதுகெஞ்சிடுவாள்
சங்கீதம்தேவன்திரு சத்தமேயென்றிடுவாள்
மங்கைசிறுராணி மகிழ்ந்தேதானின்றிடுவாள்
மழையிலேதேவனது மாவிரக்கம்கண்டிடுவாள்
குழைவாகவேயிறைவன் குணவன்புகண்டிடுவாள்
ஆர்வமிகக்கொண்டாள் மலர்மேற்சிறுராணி
கோர்த்தவற்றைகட்டிமகிழ் கொண்டாள்தனிராணி
நாட்கள்பலசென்றிடவே நற்கருணையுட்கொள்ள
மாட்சிமைநாள்வந்ததென மனதுமகிழ்கொண்டாள்

நற்கருணைநாதரையே நன்குகொளச்சித்தம்
சற்குணத்தாள்பிற்பலநாள் சரிவரவேதான்செய்தாள்
உட்கொண்டுநற்கருணை உவகைமிகக்கொண்டாளே
நுட்பமாய்ப்பன்னேரம் நுவன்றாளேநன்றிபல
நேசனும்சேசைப்பற்றி நெடுநேரம்ஓயாது
பேசலவள்ஆனந்தமே பிறிதுமகிழ்வில்லை
திருநாளில்நற்கருணை திலகமருந்திடுவாள்
மறுநாட்கள்கூடாதே மனதுவருந்திடுவாள்
நன்மையதாலடையும் நன்மைகணக்கில்லை
நன்மனமாய்த்துன்மனமும் நன்மையுறல்பொய்யில்லை
வருந்திச்சுமைசுமந்து வருவோரேநன்மைபல
தருந்தேவஆறுதலே தந்திடுவார்உண்டிடுவீர்
பரித்தியாகஞ்செய்து பத்தினியாள்வந்தாளே
ஒறுத்தலேகன்னிகையின் ஒப்பில்லாநன்மகிழ்வே
கோரமாம்நோய்பலவும் கோமகள்தெரேசாளை
தாரணியில்பற்றிமிகத் தாக்கியதேஓயாமல்
மண்ணையேசீக்கிரமாய் மறந்துபறந்திடுவாள்
எண்ணினார்எல்லோரும் ஏகுவாள்விண்ணெனவே
நாமொன்றுஎண்ணுகையில் நம்பெருமான்ஒன்றெணுவார்
ஆமேயிதுவுண்மை அப்படியேதான்நடக்கும்
கடவுளைநம்பினவர் கைவிடப்பட்டதில்லை
கடவுள்உளப்படியே கடினநோய்விட்டதுமெய்
தேவலோகபுன்னகையாய் தேவதாய்மங்கையரை
ஆவலாய் அண்டியதும் அகன்றதுநோயதுவே
செய்தநன்றிதான்மறத்தல் செவ்விதன்றுஎன்பதுபோல்
மெய்யங்கடவுளுக்கு வேணபலவாழ்த்துரைத்தாள்

சிற்சிலநாள்பின்னேரம் சிறுமிதன் தந்தையொடு
உற்சாகங்குன்ருது உலவிடப்போதலுண்டு
பாடுபட்டவுருவம் பாரிலவள்நேயபொருள்
பாடுபடவஞ்சாள் பரனேசுநாதனருள்
அன்பேஇருந்திடுங்கால் துன்பமேதோன்ருதாம்
துன்பமிருந்திடினும் இன்பமாய்மாறிடுமாம்
ஏழைஎளியவரைத் தேடியேகண்டிடுவாள்
பேதைகட்கேயுதவி பேணியேசெய்திடுவாள்
தின்பண்டமோகிடைத்தால் தீவிரமதாய்ச்சென்று
தன்னண்பர்க்கேயுதவி தான்சிறிதேதின்றிடுவாள்

தேவ அழைத்தல்

ஒன்பதுபாலகரில் ஒருநால்வர்மண்சேர்ந்தார்
துன்புலகவாழ்வகன்று துறவடைந்தாரைந்துபேர்
மரியாள், போலின், லியோனி, செலீன், மடம்சேர்ந்தவராம்
சிறியபுஷ்ப்பத்துடனே சிறப்பாகவாழ்ந்தவராம்
கடைக்குட்டிராணிதெரேஸ் அக்காள்மார்நல்வழியை
கடைப்பிடித்தேயொழுகக் கண்டனளேவாஞ்ளியை
கார்மேல்மடம்செல்ல கழியுவகைகொண்டனளே
தீர்மானமேகேட்டுத் திடுக்கிட்டார்தந்தையுமே
என்ருலும்என்னசெய்வாள் ஏகனதுபத்தினியாள்
நன்ருகவேண்டியபின் நண்ணினுள்தந்தையிடம்
"ஜெபமேதருஞ்ஜெயமே" ஜெயவிருதாய்த்தெரிந்தாள்
ஜெபதபவல்லமையை ஜெகமதிலேயறிந்தாள்.
பதினைந்துஆண்டுநிறை பதுமைதெரேசாளே
மதிமிகுந்தந்தையிடம் மனம்வெளியிட்டாளே
தேவனதுஏவுதலால் தேவனுக்கிசைந்தனரே
ஆவலாயுத்தரவு ஆருயிர்க்குத்தந்தனரே

வாசகரேநேசர்களே ஆசையுறும்மக்களுக்கு
பாசமுடன் தந்திடுவீர் துறவறஉத்தரவு.
தேவசித்தமேபாக்யம் என்றிருத்தலேநோக்கம்
ஏகனதுளம்சிலாக்யம் ஏகமாம்பேரேக்கம்
கடவுள்வழிவகைகள் கருத்தினுக்கேவியப்பாம்
கடவுளைநம்பியேநாம் காலந்தள்ளல்நயப்பாம்
வயதுகுறைவதனுல் சிரேஷ்டராம்சாமியவர்
நயமொழிகள் தான்பேசி நாள்கள்சிலகழித்தார்
தாமதம்தாங்காது தனியேக்கங்கொண்டாளவள்
ஆவலாய்மேற்றிராணி யாண்டவரையண்டினளே
பயனென்றுங்காணுது பரனருளென்று
அயராதுகண்டதன்பின் அருந்தவஞ்செய்துநின்று
ரோமைநகர்சென்ருள் தந்தையர்தம்முடனே
கோம்கன்பாப்புவிடம் உத்திரவுகொள்ளுதற்கே
பதின்மூன்றம்சிங்கராயர் பாப்புபதம்பணிந்து
கதிமடம்சேருத்தாரம் கனிவுடன்கெஞ்சிநின்ருள்
சீர்நிறைபாப்பவரும் "சேர்வாய்கடி" தென்ருர்
நேர்பதில்தாராது நீங்கினராசிதந்து
பொறுமைக்களஞ்சியமாம் புண்ணியராணியவள்
சிறுமிபெயர்க்தெழுந்தாள் **லீசியுக்**குஸிரோன்மணிதான்
அன்பினடையாளம் சிலுவைதெரிந்திருந்தாள்
துன்பின்றியின்பில்லை தொல்புவியிலென்றிருந்தாள்
இப்படியிருக்கையிலே கிடைத்ததுவேலையொன்று
எப்படியோவந்தார்கள் சிறுமியிருவரங்கு
இவ்விருகுழந்தைகளும் இனிதாகச்சேசுவையே
செவ்வையாய்க்கற்றதின்பின் சேசுநேசரானர்கள்

வெகுகாலம்காத்திருந்த வேளையதும்வந்ததுவே
மிகுஆவல்கொண்டிருந்த விருப்பம்நிறைவுற்றதுவே
சந்தோஷங்கொண்டாளே சாதுசிரோன்மணியாள்
விந்தைநன்றிதான்செலுத்தி விநயமாய்ராணியவள்
தந்தைசுற்றத்தாரைத் தநயள்பிரிந்திடவே
நொந்தாள்மனமதுவே சொந்தம்மறந்திடவே
திலகம்தெரேசாளை திங்கள்முகத்தாளை
அழகேஉருவெடுத்த அமலியாம்நங்கையரை
புன்னகையோடுற்ற புஷ்பசிரோன்மணியை
உன்னதக்கன்னிகையை உன்னதச்செல்வியை
பிரியச்சகிப்பாரோ பெற்றோர்சுற்றத்தாரும்
மறக்கத்திகைத்தாரே மற்றோரும்உற்றவரும்
கண்ணீர்உகுத்தாரே கண்ணிமைகள்வீங்கிடவே
கண்மணியைப்பிரிய கண்டவர்கள்ஏங்கிடவே
சின்னராணிமங்கையருங் கண்ணீர்வடித்தனளே
நன்னயநங்கையாளும் தந்தைதனைப்பிடித்தாள்
எல்லாமவன்செயலே என்றுமனந்தேர்ந்தார்
எல்லோரும்கன்னிகையை ஈசனுக்குநேர்ந்தார்கள்
சென்றாளேகன்னிகையும் செம்மையாய்கார்மேல்மடம்
கண்டாளேபூமோக்ஷம் கர்த்தனதுபத்தினியாள்
மலர்முகமங்கையர்க்கு **திருமுகத்தின்தெரேஸ்பேர்**
படர்ந்தொளிர்நெற்றியாளே பறந்தாள்பலருமழ

கார்மேல் மடம்.

புண்ணியசாங்கோபாங்கம் புஷ்பத்தின்நோக்கமதே
கண்ணியமாய்கொண்டனளே கன்னிஏகஏக்கமதே
அற்பமும்அற்பமன்று என்றேயறிந்திருந்தாள்.
கற்பினலங்காரி கண்டுதெளிந்திருந்தாள்

மற்றும்பல்கன்னியர்க்கு மாஉதவிசெய்துவந்தாள்
நற்றவப்பயிற்சியிலே நன்குதேற்சியடைந்தாள்
மனத்தளர்வேற்படுங்கால் மங்காள்முகஞ்சிறிதும்
கனமாஞ்சிலுவையையுங் கற்புடையாள்தான்சும்ப்பாள்
ஒறுத்தல்தவமுயற்சி மறத்தல்கிடையாது
வருத்தம்அனுபவிப்பாள் கவலையடையாது
அலங்கோலங்கண்டுவிட்டால் அடுத்தோரிடங்களிலே
களங்கமறும்இவளோ ஒழுங்குமிகச்செய்வாள்
கன்னியுடையணியுங் கனத்தநாள்வந்ததுவே
கன்னியழகுமுகம் கவலைகளைந்ததுவே
புத்திரியைமுத்தமிடப் பெற்றாரேபாக்கியமே
பத்திநிறைதந்தையரே பாரில்சிலாக்கியமே
தந்தைசிலநாள்கழித்துத் தற்பரன்தாள்சேர்ந்தாரே
சந்தோஷமாய்த்தேவன் தன்பால்மகிழ்ந்திடவே
திருமுகத்தெரேசாளோ திகிலேதுங்கொள்ளவில்லை
ஒருஏக்கங்கொண்டாளே ஒப்பில்லான்கண்டிடவே
காலைமாலைவேளை காணும்ரோஜாவெடுப்பாள்
மாலைமரிபீடமிட்டு மாதுமெழுகெரிப்பாள்
வார்த்தைப்பாடுகொடுக்கக் காலம்நெருங்கிடவே
நேர்த்தியாய்ஆயத்தம் நிகழ்த்தத்துணிவுற்றாள்
தன்னைமுழுவதுவும் தன்னரும்மன்னனுக்கு
நன்னயமாயொப்புவித்தாள் நன்மைச்சொரூபனுக்கு
அற்பப்பாவமதுவும் அணுகாப்பெருவரமே
தற்பரனைவேண்டிச் சனுவாயடைந்தாளே
பத்தாவாம்சேசுவுக்குப் பரமானந்தந்தருவாள்
நித்தமும்பன்முறையே நிமலனையண்டிடுவாள்

ஆத்துமமீட்பினுக்காய் ஆண்டவர்தாம்மாண்டாரே
எத்தனுறுமித்தாகம் இளையாளுங்கொண்டளே
உலகமுழுவதையும் ஒண்பரனுர்தம்பாதம்
சுலபமாய்ச்சேர்ப்பதற்குத் தொடர்ந்துமுயன்ருளே
ஒறுத்தல்தவமுயற்சி ஒன்ருங்கருத்துடனே
உறுத்தோடுசெய்திடுவாள் உறுதிதளராது
என்னதான்நேர்ந்தாலும் இளையாஉறுதியுடன்
அன்னவர்க்காய்ச்செய்வாள் அற்பமாங்காரியமும்
என்னதான்வந்திடினும் ஏகன்விரல்காண்பாள்
என்னநிகழ்ந்திடினும் ஏகனையேபுகழ்வாள்
இவ்வழிகைக்கொண்டே இன்பமுறுராணி
செம்மையாய்நம்மையுமே சேர்க்கும்மோட்சஏணி
புண்ணியநெறிநிற்றல் பூதமெனமயங்கேல்
கண்ணியவாசகரே கஷ்டமெனத்தயங்கேல்
எல்லாம்அவன்செயலே என்றுநடந்திடுங்கள்
எல்லாம்பொறுத்திருந்தே இருநிலம்ஆண்டிடுங்கள்
உம்திருச்சித்தமென்று ஓயாதுசொல்லிடுங்கள்
நம்திருச்சீவியத்தின் நல்விருதாகிடட்டும்
அவனன்றியோரணுவும் அசையாதிதுவுண்மை
அவன்பாதஞ்சேர்ந்தோரே அடைவாருளுண்மை
திருமுகத்தெரேசாளின் செவ்வியசீவியத்தின்
சிறுபுஷ்பக்கன்னிகையின் சிறப்பானசீவியத்தின்
ரகசியமேயிதுதான் நண்பரேம்வாசகரே
அதிசயமொன்றுமில்லை இன்பநிறைநேசர்களே
பிள்ளைபோல்நம்பிடுங்கள் இறைவனைத்தந்தையைப்போல்
தள்ளையாள்தன்னையே தனிப்புதல்வர்நம்புதல்போல்

முக்கியமாயக்குழந்தையின் களங்கமற்றமனது
பக்குவமாய்க்கொண்டிருந்தால் பரத்திற்கிடரேது
இந்தக்கருத்துடனே எழிலார்தெரேசாளும்
சந்ததம்நம்பெருமான் தாள்மலரைப்போற்றி
வளர்பிறைச்சந்திரன்போல் வயதிலும்ஞானத்திலும்
வளர்ந்தாளேபுண்ணியத்தின் வழியிலெழிலோடு
சேசன்றிவேறில்லை சேசுவின்பத்தினிக்குப்
பேசலும்சேசன்றிப் பிறரில்லையுத்தமிக்கு
நித்தியவார்த்தைப்பாடு அளித்தாள்சிறியபுஷ்பம்
நித்தியன்பாதமதில் நிம்மதிகண்டாள்புஷ்பம்
தகனப்பலியாகத் தன்னைமுழுமையுமே
அவனிடம்ஒப்புவித்தாள் அருமையாம்யாவையுமே
சாயாதிவன்புகழைச் சாதுவும்பாடிடுவாள்
ஓயாதொழியாது நேசங்கொண்டாடிடுவாள்
நவகன்னியராட்சி நல்லபதவிகண்டாள்.
தவஜெபபேர்படைத்த தர்மவதிகைக்கொண்டாள்
தன்னடியிலுள்ளவர்க்குத் தகுந்தவிதமதிலும்
நன்னடத்தைகற்பித்தாள் அற்பவழியதிலும்
நாட்கள்கழிந்திடவே ராணிஎல்லோருக்குமே
மாட்சிசேர்மாதிரிகை ஆனுள்சிரேஷ்டருக்கும்
அகத்தின்அழகதுவே முகத்தில்ஜொலிப்பதுபோல்
இகத்திலிவள்தூய்மை எழிலார்முகங்கண்டார்
தெரேசாளைக்கண்டவர்கள் பலனின்றிப்போனதில்லை
அரசனின்அன்புபற்றி அனலாயெரிந்தார்மெய்
ஆதிபிதாபுத்திரியே நீதிசுதன்பத்தினியே
பாவிகளாம்எங்களையே பார்த்தருளும்உத்தமியே

என்றவளையுலகோர் இறைஞ்சும்வழியாக
நின்றேதிகழ்ந்தாளே நிறைந்தகுணராணி
மாக்ஷிசேர்சுந்தரியாள் அநுபோகவழியாக
தாழ்ச்சியவ்வசியத்தை அறிந்தாள்சுளுவாக
தானென்னும்தீயெண்ணம் தாரகையாள்கொள்ளவில்லை
வான்சேர்க்கும்எண்ணமதால் வாள்வுற்ருள்பொய்யில்லை
ஆருயிர்ச்சேசுவோடே ஒருயிராகிவிட்டாள்
பாருலகைநோக்காது பரனையேகண்டுநின்ருள்
தேவப்ரசாதத்துடன் தேவியோஉத்துழைத்தாள்
ஆவலாய்ச்சேசுவையே ஆடிப்பாடிக்களைத்தாள்
பிறரிடம்தேவநிலை கண்டுபரனைப்புகழ்ந்தாள்
பரனுக்காயன்னவர்மேல் பாசம்வைத்தேமகிழ்ந்தாள்
கிறிஸ்துமனுமகனின் ஞானஉடலதையும்
திருத்தமாய்க்கண்டுணர்ந்தாள் கீர்த்திப்ரதாபத்தையும்
சிருஷ்டிகள்யாவற்றையும் சிநேகிக்கஎத்தனித்தாள்
கிறிஸ்துநாதர்பொருட்டு கிளருமனக்கருத்தாள்
இந்தவிதவன்பு இளையாளைஏவியது
சுந்தரன்எல்லோர்சேரல் சுளுவென்னும்எண்ணமது
ஜெபதபம்செய்துவந்தாள் ஜெகத்தில்ஜெயம்பெறவே
ஜெயமுமடைந்தனளே தீமையில்லாதறவே
ஒறுத்தல்தவங்களினுல் உணர்ந்தார்சிலர்பரனை
திரித்துவஏகனையுந் திருமோக்ஷமுந்தெரிந்தார்
மிஷனுட்டிலேயுழைக்கும் கன்னியர்சந்யாசிகட்காய்
நிதம்வேண்டிவந்தனளே நிச்சயம்குருக்களுக்காய்
காசுபணம்கொடுக்க வகையில்லாஅன்பர்களே
மாசிலானைவேண்டும் மிஷனுக்காய்நண்பர்களே

மனமுண்டெனில்இடமாம் மாண்டகுணத்தோரே
பலதுள்ளிபெருவெள்ளம் பரமன்மதத்தோரே
சுவிசேஷநன்மறையைத் தொடர்ந்துபடித்திடுவாள்
நிமிஷமுங்கைவிட்டு நீக்காள் தனிமறையை
பத்தாவின்மட்டிலுள்ள பத்திமிகுநேசமதால்
பத்தினிராணியவள் பரலோகசிந்தையுற்றுள்
அவளதொருநோக்கம் நேசம்சிநேகமதே
அவளதுபேராவல் அன்பரின்நேசமதே
ஏகன்நேசம்வாழ்வின் ஏககதியாகும்.
தேவனின்நேசமதே தேடல்சரியாகும்
துன்பமிலாதின்பமில்லை தொல்புவிமீதினிலே
அன்பர்க்காய்த்துன்பமதும் அனுபவித்தலின்பமதாம்
அன்புண்டால்துன்பமில்லை அழியும்உலகதிலே
நண்பனருகிருத்தல் நலமாமிடர்களிலும்
கிரிகையிலாநேசம் கிளருயிரற்றதுவாம்
பிரியமாயன்பனுக்காய் பெரிதுஞ்செயும்நேசம்
தினந்தோறுந்தேவனது திருப்புகழ்பாடிவந்தாள்
மனமாரநேசமதை மகிழுடன்காட்டிவந்தாள்

மரணம்

இவ்விதநேசமுடன் இனிதாயொன்றித்தாளே
இவ்வுலகைப்பிரிய இறைவன்தீர்மானித்தாரே
பெரியவெள்ளிக்கிழமை பெருஞ்சுரங்கண்டதுவே
சிறியபுஷ்பத்தினுக்குச் சிறிதில்லைவேதனையே
குருசிலேமாண்டபரன் குறிப்பிற்கமைந்திருந்தாள்
சிறுதெரேஸ்வேதனையாம் சிலுவையையேற்றுளே
மரணப்படுக்கையிலும் மனத்தாற்புகழ்ந்தாளே
பரன்பாதமெப்போதும் பண்பாயுரைத்தாளே

சாகுங்காலந்தெரிந்துஞ் சஞ்சலப்பட்டாளில்லை
ஏங்கவில்லைசற்றும் ஏசுவின்பத்தினியாள்
வேதனைமிக்கிருந்தும் மினிர்முகம்வாடவில்லை
தேவனைநாடியேதான் தேவிமயங்கவில்லை
முகமதில்வானொளியே முழுதும்விளங்கியதே
சுகமுள்ளமாதெனவே தோன்றிற்றுதேகமதே
யாவரும்ஓடிவந்தார் எதிர்பாராதவிதமாய்
ஆவலாய்க்கண்ணீரே ஆறேடச்சிந்தினரே
கன்னிகைமேலோகக் கதிரொளிகொண்டிருந்தாள்
நன்னயப்பத்தாவின் நறுநிலைகண்டிருந்தாள்
குருசைநோக்கிச்செபித்தாள் குன்றுதமெய்த்தவத்தாள்
“ உறுதியாய்நேசிப்பேன் உம்மையே ”என்றுரைத்தாள்
பரமன்பதம்நொடியில் பண்பாய்ப்பறந்துற்றாள்
பரலோகம்சாலாறு பாலவயதிற்சென்றாள்
துன்பஇவ்வீணுலகைத் துரிதமாயேமறந்தாள்
அன்பாய்சுற்றத்தாரை அமலிதுறந்துவிட்டாள்
கார்மேல்மடமதிலே காண்பதுதுக்கமதே
கார்மேகம்எங்கணுமே காணஇருள்கிட்டியதே
சந்திரனில்வான்போல தயங்கியவேஎல்லாமும்
சுந்தரியைக்காணுது துக்கித்ததுஅஃறிணையும்
பறவைகள்துக்கத்தினல் பலகானம்பாடியவே
மரங்களுந்துன்பமதால் வாடியிலையுதிர்ந்த
சின்னராணிதான்விரும்புஞ் சீரிடங்கண்டுற்றாள்
நன்னயபத்தாவாம் நண்பரிடஞ்சென்றடைந்தாள்
வானுலகச்சேனைகளே பரிசுத்தர்கூட்டமதே
ஞானவிராகம்பாடக் கேட்குமாடல்பாடல்

பரலோகமேமுழுதும் பகருமிவள்புகழே
பரன்புகழோயாது பாடியேநின்றும்
தம்மையடைந்திடவே தரணியில்நமைப்படைத்தான்
செம்மையுறுராணி சென்றடைந்தாள்நாதனையே.

புகழ் மாலை

சிறுவழிகையாடி சிறுகாலமிங்குதள்ளி
பெரும்புகழ்பெற்றுநிற்கும் பேர்படைத்தபுஷ்பகன்னி
விண்ணாட்டிருந்தேநம் விண்ணப்பம்ஓயாது
மண்ணுலகோர்வேண்டுதலே கேட்டிடுதல்ஓயாது
எண்ணரும்மக்களது அன்பைக்கவர்ந்துகொண்டாள்
கண்ணியமாய்க்கன்னிகையும் கடவுள்பதஞ்சேர்ந்தாள்
பாப்பரசராகும் **பதினோராம்பத்திநாதர்**
ஆர்ப்புறப்புஷ்பத்துக்கு அர்ச்சிஷ்டபட்டம்தந்தார்
அன்னவரும்நன்மை அடைந்தார்பலஅவளால்
கன்னிநம்மேற்பொழிவாள் கருணையேஅன்புடனே
தந்தைக்குச்சுகவரம் தயவாய்க்கொடுக்கலையோ
மந்தையைமேய்த்திடவே மாவருள்செய்யலையோ
சுந்தரன்மேஜைமீது சுகுணமாய்வைத்திருந்தார்
சுந்தரிசுரூபமொன்று சுபபொருள்காத்துவந்தார்
உயிர்நீங்கும்வேளையிலும் உத்தமிஅருளிக்கம்
இவர்கிட்டவைத்திருந்து இறந்துசென்றார்மோட்சம்
ரோஜாவின்முட்களாம் துன்பமேமண்ணிலுண்டு
ரோஜாப்பூஇன்பமதோ தந்திடுவாள்விண்ணில்நின்று
தேடும்இவள்சலுகை தேங்கிடும்வாசகரே
நாடுங்கள்கண்டிடுவீர் நானிலத்திலானந்தம்
கேட்டிடுங்கள்பெற்றிடுவீர் கேடடைந்ததோழர்களே
மேட்டிமையால்வாடாதீர் மேன்மைவரும்வாசகரே

ராணியிடம்படிக்க நற்குணம்பலவுண்டு
நாணிஇவள்முன்னே நாமேநிற்றல்நன்று
சிறுவழிகையாடச் சிறியபுஷ்பம்மாளே
திருவழியூட்டியருள் திவ்வியவரத்தாளே

புதுமைகள்—பண உதவியும், வியாதீ குணமடைதலும்

மாதிவள்செய்புதுமை மாநிலத்தில்மெத்தவுண்டு
ஓதுவேன்நான்கொஞ்சம் உறுதியாய்நம்பிடுங்கள்
இத்தாலிதேசமதில் இப்புதுமைநேர்ந்ததுவே
உத்தமிவேண்டுதலால் உறுதியாய்வந்ததுவே
கார்மேல்மடத்தாயார் கடன்படநேர்ந்ததுவே
யாருதவிசெய்வரென ஏங்கியிருந்தனளே
இச்சமயம்நோய்க்கு இலக்கானள்அத்தலைவி
நச்சையாம்பேரிடரால் நசுக்குண்டாள்அப்போது
நவநாளோபுஷ்பத்துக்கு நன்குசெய்தாள்தாயாரே
கவனமாய்ச்செபித்ததால் கண்டாள்பலன்நேரே
அழகானபெண்ஒருத்தி அல்லிராவண்டைவந்து
விழைவுடனேயெழுப்பி விநயமுடனின்று
பணமோஐந்நூறுதந்து "பாக்கிகொடு" மென்ருள்
"பணக்கடன்முன்னூ"றென பதஷ்டமாய்தாயுரைத்தாள்
வந்தவள் "கடன்போக மற்றவையுமக்" கென்ருள்.
விந்தையாய்த்தாயாரும் "ஆண்டவளேதாயே"யென்ருள்
சுந்தரி "நான்புஷ்பம்" என்று சொல்லியரைநொடியில்
வந்தவழிசென்ருள் மற்றும்சுகமீந்து
இன்னும்பல்வேளைகளில் இவ்விதம்தாயாரே
கன்னிதெரேசுதவி கண்டதுண்டுதான்நேரே
வறுமைப்பிணிவாயில் வருந்தாதுநாடிடுங்கள்
அருமையாய்நேசர்களே அமலியைத்தேடிடுங்கள்

எப்படியுமுதவி ஏக்கமறகண்டிடுவீர்
தப்பாதுகேட்டபொருள் தயங்காதுகொண்டிடுவீர்
பொறுத்தவர்பூமியாழ்வார் புண்ணியனைநம்பிடுங்கள்
வருத்தமுறும்போது தெரேசாளை அண்டிடுங்கள்.
பணமென்ருல்பிணமுமே வாய்திறக்குமென்பார்கள்
பணப்பேய்பிடியாது பத்திரமாயிருப்பீர்
போதுமென்றமனமே பொன்செய்மருந்தாமே
ஏதுஇருந்தாலும் ஏக்கமேதீராதாம்
உள்ளதைக்கைக்கொண்டே உற்றதுசெய்திடுவீர்
இல்லதைவீணுக இச்சித்துவாடாதீர்
அன்றன்றுள்ளஎங்கள் அப்பமின்றேயருளும்
அன்றுள்ளஅல்லல்சரி அம்பரனேகைதாரும்.

குடிகாரன் துணமடைதல்

குடியினுல்கேடுற்ற குடிகள்பலவுண்டு
முடிவாகக்கூறிடவே முடியாதனேவோர்க்கும்
குடிகெடுக்குங்குடியைக் குலத்தைபழமொழியே
குடியன்குடியதினுல் குணமிழத்தல்தப்பாதே
குடியன்குடிப்பதுவோ குடும்பத்தார்கண்ணீரே
குடியன்குடிப்பதுவோ குடும்பத்தார்புண்ணீரே
இழிவாம்பழக்கமதிற் கிசைபவன்பாதகனே
பழிவாங்கஅஞ்சானே பாவந்தனக்கஞ்சான்
பன்றிபோல்நாற்றமதை பருகிப்புரண்டிடுவான்
நன்றியில்லாநீசன் நரகசுகங்கண்டிடுவான்
மனைபொருளேதோற்பான் மதியறுபாதகனே
மனைவியைத்தன்மகவை மதித்திடான்தீயோனே
காட்டில்குடித்துவிட்டு காண்பானேகொண்டாட்டம்
வீட்டில்உணவதற்கும் ஊணுக்குந்திண்டாட்டம்

சமாதானம்நீங்கிச் சதிமானம்வீடுபுகும்
அவமானமேராளம் அழுகையும்பற்கடிப்பும்
மதியில்லாத்தீக்குடியால் மதிப்புறும்உற்றவர்க்கும்
சதிசெயுங்கேவலமே சம்பாத்தியமாகும்
நற்பயனில்இக்குடியை நற்குலவான் தற்செயலாய்
துற்போதத்தாலுண்டு துணிந்தான்சிறுபயலாய்
பாரியாள்பிள்ளைகட்கோ பாரில்இடரனந்தம்
மாரியாகக்கண்ணீர் மழைபொழிந்தார்பாபம்
ஓர்வழியுங்காணுதே ஓலமிட்டுநொந்தாரே
ஓர்நினைவாய்ப்புஷ்பத்திற்கு ஓர்நவநாள்செய்தாரே
சிறியநம்ராணியவள் சிறுமையில்கைகொடுத்தாள்
பிரியமாய்த்தான்கேட்டுப் பேரிடர்நின்றேவிடுத்தாள்.
வந்ததுவேநற்காலம் வறண்டவிவ்வீட்டார்க்கு
சுந்தரிஉதவியால் சுபமேகுடிதனக்கு
ஒற்றுமைச்சந்தோஷம் உவந்துகுடிகொண்டதுவே
நற்றவச்சீர்சிறப்பாய் நன்மையிடங்கண்டதுவே
அண்டிடுங்கள்தெரேசாள் அவனியிலேகுடியால்
இண்டாடுவோரேமது தின்மைப்பிணியகலும்

புரோட்டேஸ்டாண்டு பாதிரியார் மனந்திரும்பியது

நாகரீகத்தின்பேரால் நாசரீகம்தான்வளர்ந்து
மாகுற்றப்பாடலுடன் மட்டில்நடனமுண்டு
தெய்வமுண்டென்றின்று தெரியாதுளறுவரே
எம்மதமும்சம்மதமே எதார்த்தமாங்கொள்கையதே
வேதமெலாம்வாய்மதமே மீதூண்விரும்பிடுவோம்
சேதமேபோகாது சேமமாய்நாள்கழிப்போம்
கலிகாலக்கொள்கையது காணும்பலவியப்பே
மலிந்தபொய்க்கொள்கையதோ மண்ணில்பலவாமே

பேயதுவுந்தோழர்களும் பேரிரைச்சல்போடுகின்றார்
மாயவலையிற்சிக்கி மோசமேபோகாதீர்
கற்றதுகைமண்ணளவு கல்லாததுலகளவு
கற்றதிற்கிசைந்திடத்தாம் நிற்றலேபேரழகு
தேவனையேயெப்போதுந் தேடியேஓடல்மதி
ஆவலாயவன்பாதம் பாசமுடன்நாடல்சரி
போதகனும்சேசின்ராணி போலிஉண்மைகண்டனளே
சோதனையில்வெற்றிபல சோகமறக்கொண்டனளே
தன்னதுஜீவியத்தின் கதியதைப்புரோட்டெஸ்டாண்டு
நன்னயப்பாதிரியார் நாடும்பருவமதில்
தற்செயலாய்ராணி சரிதைதனைப்படித்து
நற்சீலிவாழ்க்கைவழி நாட்டம்பெரிதுற்றார்
என்செய்தாலும்மனதை என்றும்உறுத்தியதால்
கன்னியின்மாதிரிகை கன்மனத்தையேயுருக்கும்
தேவருளால்தன்பிழையைத் தேம்பாதுணர்ந்தாரே
ஏகன்வரம்நன்மனதாய் ஏக்கமுடன்கேட்டுநின்றார்
கேட்டிடும்கொடுக்கப்படும் என்றவர்செவிகொடுத்தார்
கேட்டபடிதேவனுமே கேட்டஒளிகொடுத்தார்
வேறனேகர்பாதிரியார் வேதஞ்சேரவிரும்பி
தேர்வரியராணியாளை செபமதால்அண்டினரே
இன்னொருநாள்பாதிரியார் இவளிடம்வேண்டினரே
"அன்னையின்றிபிள்ளையில்லை" அன்பின்குரல்கேட்டார்
அன்னோரம்அன்னவரும் அன்னைமரியையேற்றுற்றார்
தன்னிகரிலாமரியைத் தன்தாயாயேற்றுநின்றார்
கத்தோலிக்கராணரே களங்கங்களைந்தனரே
"உத்தமியாந்தெரேசாள் உதவியே" யென்றனரே

அன்புநிறைவாசகரே அஃதைமறவாதீர்
பண்புடனேஎப்பொழுதும் பதித்துளங்கொண்டிடுவீர்.
கெட்டகிறீஸ்தவருங் கேடுறுங்கொள்கையரும்
கெட்டவழிவிட்டுவிட எச்சரித்தல்வேண்டாமோ
சேசுவுக்குஆத்துமங்கள் சேர்க்கவிரும்பினளே
சேசுவின்பத்தினியாள் சேகரித்தாள்மற்றவரை
அண்டிடுங்கள்நம்பலுடன் அடைவீர்விரும்பியதை
கண்டடைவீர்வேண்டியதை கண்டிப்பிதுநிசமே
மனமதுதிரும்பிடவே மனம்வரும்தேவனருள்
மனங்கசிந்தேயழுது மறப்போம்பல்பாவஇருள்
குழந்தைதெரேஸ்புதுமை குறிக்கமுடியாது
சிறந்தபல்அற்புதமோ சித்தரிக்கவேலாது
என்றைக்கும்எப்போதும் எவ்வுதவியுஞ்செய்வாள்
இன்றைக்கும்ரோஜாவே இன்பமழைபொழிவாள்.
கன்னிதெரேசம்மாள் கருத்துறுமாசரிதம்
உன்னதமாய்க்கற்போரும் ஒழுகியதன்வழியில்
தட்டறநடப்பவரும் தாம்பிறர்க்குச்சொல்பவரும்
மட்டறுமிருமையின்பம் மாறுதுபெற்றுய்வார்
வேதமொழிவாழி மேரிமகன்வாழி
காதலுறுபாப்பரசர் கடுந்தவருமேவாழி
உத்தமமெய்க்குருவும் உயர்ந்தோருந்தான்வாழி
கத்தோலிக்கர்வாழி கன்னியர்சந்யாசிவாழி
பத்தினிராணியிவள் பாரெழிற்காதையதை
கற்பவருங்கேட்பவருங் கருத்துறவாழியவே.

விருத்தம்

அற்புதவரத்தியான அர்ச்சிஷ்ட தெரேசம்மாளே
கற்பகத்தருவேபோன்று கர்த்தனின் அருளைப்பெற்று
பற்பலஆன்மதேகப் பரிவருள்நன்மையோடு
தற்பரன்திருத்தாள்சேர்க்க தஞ்சம்யாம்பெற்றோம்காவே.

முற்றிற்று.

அர்ச். குழந்தை சேசு தெரேசம்மாளின் நவநாள் ஜெபம்

அர்ச். குழந்தை சேசு தெரேசம்மாளே! சிறிய சுகந்த புஷ்பமே! தேவசிநேகத்தினால் பற்றியெரிந்த கன்னிகா ரத்னமே! துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலே! அண்டி வந்தவர்களைக் கைவிடாத பேருபகாரியே! அம்மா! பாவி நான் உம்மை நம்பி வந்தேன். நான் கேட்கும் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயையுடன் சேசுவின் திரு இருதயத்தினின்று பெற்றுக் கொடுத்தருள்வீராக! ஆமென்சேசு. 3-பர. 3-பிரி. 3-திரி.

அர்ச். குழந்தை சேசு தெரேசம்மாள் பிரார்த்தனை

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,— எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—எங்களைத்...

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா,—எங்களைத்...

அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,—எங்களைத்...

அர்ச். மரியாயே,

பரிசுத்த வெற்றி நாயகியே,

சர்வேசுரனுடைய ஊழியக்காரியாகிய அர்ச். தெரேசம்மாளே,

சேசுநாதர்சுவாமியின் ஞானப் பத்தினியாகிய அர்ச். தெரேசம்மாளே,

சர்வேசுரனுடைய கொடையாகிய அர்ச். தெரேசம்மாளே,

பாலிய பருவத்திற்றானே விசேஷித்து விளங்கிய அர்ச். தெரேசம்மாளே,

கீழ்ப்படிதலின் மாதிரிகையாகிய அர்ச். தெரேசம்மாளே,

தேவ சித்தத்துக்கு முற்றாக உம்மைக் கையளித்துச் சீவித்த அர்ச். தெரேசம்மாளே,

சமாதானத்தைச் சிநேகித்த அர்ச். தெரேசம்மாளே,

பொறுமையைச் சிநேகித்த அர்ச். தெரேசம்மாளே,

சாந்த குணத்தைச் சிநேகித்த அர்ச். தெரேசம்மாளே,

} எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

தற்பரித்தியாகக் கிருத்தியங்களில் வீரத்துவங் காண்பித்த அர்ச். தெரேசம்மாளே,

மன்னிப்பு அளிப்பதில் உதார குணங் காண்பித்த அர்ச். தெரேசம்மாளே,

வறியவர்களின் உபகாரியாகிய அர்ச். தெரேசம் மாளே,

சேசுநாதர்சுவாமிமேல் விசேஷித்தஅன்பு வைத்த அர்ச். தெரேசம்மாளே,

சேசுவின் திருமுகப் பத்தியை விசேஷ விதமாய் அனுசரித்த அர்ச். தெரேசம்மாளே,

தேவநேச அக்கினியால் தகனிக்கப்பட்ட அர்ச். தெரேசம்மாளே,

எவராலும் கைவிடப்பட்டவர்களின் மத்தியஸ்தியாகிய அர்ச். தெரேசம்மாளே,

செபம் செய்வதில் கடைப்பிடியுள்ள அர்ச். தெரேசம்மாளே,

சர்வேசுரனிடத்தில் மிகவும் வல்லபம் படைத்த மத்தியஸ்தியாகிய அர்ச். தெரேசம்மாளே,

பரலோகத்திலிருந்து உரோசா மலர்மாரி பொழிகின்ற அர்ச். தெரேசம்மாளே,

உலகத்தாரின் உபகாரியாகிய அர்ச். தெரேசம் மாளே,

கேட்கும் மன்றாட்டுகளையெல்லாம் பெற்றுத் தரும் அர்ச். தெரேசம்மாளே,

பரிசுத்த கற்பைச் சிநேகித்த அர்ச். தெரேசம் மாளே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மனச் சம்மதமான தரித்திரத்தைச் சிநேகித்த அர்ச். தெரேசம்மாளே,

கீழ்ப்படிதலைச் சினேகித்த அர்ச். தெரேசம்மாளே,

தேவ தோத்திர வாஞ்சை என்னும் அக்கினி மூண்டெரிந்துகொண்டிருந்த அர்ச். தெரேசம்மாளே,

தேவ சிநேக அக்கினி செறிந்து சுவாலித்துக் கொண்டிருந்த அர்ச். தெரேசம்மாளே,

தேவ ஆசீர்வாதத்தின் புத்திரியாகிய அர்ச். தெரேசம்மாளே,

சர்வேசுரனை நம்பி நடப்பதில் மிகவும் விசேஷித்து விளங்கிய அர்ச். தெரேசம்மாளே,

அபூர்வ புத்தி சாதுரியம் விளங்கிய அர்ச். தெரேசம்மாளே,

உம்மை மன்றாடுகிறவர்களுக்கு ஏதோ ஒரு பதில் கொடுக்க ஒருபோதும் தவறாத அர்ச். தெரேசம்மாளே,

இரட்சண்யத்தின் நிச்சயமான வழியைப் படிப்பிக்கிற அர்ச். தெரேசம்மாளே,

தேவ அன்பின் பலியாகிய அர்ச். தெரேசம்மாளே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்களைத் தயை பண்ணி இரட்சியுஞ் சுவாமி.

மு.—அர்ச். சேசுவின் சிறிய புஷ்பமே,

து.—எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்

சர்வேசுரா சுவாமி! உமது ஊழியக்காரியாகிய குழந்தை சேசுவின் தெரேசம்மாளுடைய ஆத்துமத்திலே தேவ நேச அக்கினி மூண்டெரிந்துகொண்டிருக்கும்படி செய்தருளினீரே! நாங்களும் உம்மை நேசிக்கவும், மற்றவர்கள் உம்மை நேசிக்கும்படி செய்யவும் அநுக்கிரகம் பண்ணியருளும்.—ஆமென்சேசு. (100 நாள் பலன்)

St. Joseph's Industrial School Press, Trichy.—1940

ST. J. I. S PRESS
TRICHINOPOLY